Impact Factor (SJIF): 6.092 E-ISSN: 2583-1615

International Journal of Research in Academic World

Received: 08/July/2024 IJRAW: 2024; 3(8):149-153 Accepted: 13/August/2024

# நற்றிணை மகளிர் அகக்கோட்பாடு

*[1]செ.பிரிசில்லா

*[1]பிளச்.டி. அறிஞர், அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோவை, தமிழ்நாடு, இந்தியா.

**சுருக்கம்**

சமூக வாழ்க்கைத் தளத்தைக் கட்டமைத்து நிலைப்படுத்திப் பயன்கொள்வதற்காக மனிதன் தனக்குத்தானே சில வாழ்வியல் நெறிகளைப் பண்பாடுகளோடு இயைந்த சட்டதிட்டங்களாகவும் விதிமுறைகளாகவும் ஏற்படுத்திக் கொண்டான். அத்துடன் வாழ்வியல் தொடர்பான சில நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் தோற்றுவித்து அதனைத் தன் வாழ்வியலோடு இணைத்து உறவாடப் பயன்படுத்திக்கொண்டான். குடும்பம், இனம், தொழில் வாணிகம் எனப் பன்முகத் தன்மையோடு சமூகம் கட்டமைக்கப்பட்டது. மக்கள், குடும்பம் மற்றும் சமூக வாழ்வியலில் கொண்டிருக்கும் நம்பிக்கைகளும், அந்நம்பிக்கைகளின் வழிப்பட்ட பழக்கவழக்கங்களும் வாழ்வியல் செயற்பாடுகளாகிய அவையே மக்களின் பொதுவாழ்வியல் நெறிகளாயின. இதன் அடிப்படையில் நற்றினை கூறும் மக்களின் வாழ்வியல் கூறுகளின் தனித்தன்மைகளையும், அவர்களது பண்பாட்டியல் கூறுகளின் சிறப்புத் தன்மைகளையும் ஆராய்ந்த பொழுது மகளிரின் அகக்கோட்பாடுகள் சிறப்புத் தன்மை கொண்டதாக அமைந்துள்ளது. அதிலும், ஆறறிவு உடைய மனிதர்களோடே மனிதத் தன்மையோடு உறவாட முன்வராத காலத்திலேயே ஓறறிவு உடைய உயிர்கள் முதலே மனிதத் தன்மையோடு உறவாடிய நற்றிணை மகளிரின் அகக்கோட்பாடுகள் தனித்தன்மை வாய்ந்ததாக விளங்கியது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நற்றிணை மகளிரின் அகக்கோட்பாடுகள் குறித்து ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**முக்கிய சொல்:** சமூக வாழ்க்கை, பொதுவாழ்வியல் நெறிகள், தனித்தன்மை, நற்றிணை மகளிரின் அகக்கோட்பாடுகள்

## முன்னுரை

காதலையும் வீரத்தையும் இரு கண்களெனப் போற்றி வாழ்ந்தவர்கள் சங்ககால மாந்தர்கள்; அத்துடன் கூர்த்தமதி உடையவர்கள் என்பதை அவர்தம் பாடல்கள் தெளிவாய் எடுத்துரைக்கும். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணை காதல், அன்பு, இல்வாழ்க்கை முதலிய அக வாழ்வு முறைகளை எடுத்தியம்புகிறது. பெண்கள் தனித்தியங்க இயலாதவர்களாகவும் பெற்றோரையோ கணவனையோ உறவினர்களையோ சார்ந்து இருக்க வேண்டியவர்களாகவே காணப்படுகிறார்கள். ஏனெனில் அடிப்படையில் இந்தியச் சமூகம் ஒரு ஆண் மையை சமூகமாகும். ஆணியச் சமூகப் பின்புலத்தில் பெண் அடிமையான வரலாறு என்பது தனித்து விவாதிக்கப்பட வேண்டியதாக உள்ளது. அதுபோல பெண்ணின் தன்னிலையானது ஆணியச் சார்புடன் கட்டமைக்கப்பட ஏதுவான சூழமைவுகளை எங்கனம் சங்க பாடல்கள் வெளிப்படுத்துகின்றன என்பதை நற்றிணையின் பாடல்கள் கொண்டு மகளிரின் அகக்கோட்பாடுகளை இங்கு விரிவாகக் காண்போம்.

## நற்றிணை

'நல்' என்னும் அடைமொழியினையும், நற்றிணை நானூறு என்னும் சிறப்புப்



*Corresponding Author: செ.பிரிசில்லா

பெயரையும் கொண்டு ஆகச்சிறந்த நூலாக விளங்குகிறது. 9 அடி முதல் 12 அடிகள் வரையிலான 400 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புப் பெற்ற இந்நூலை தொகுத்த புலவரின் பெயர் இடம் பெறவில்லை. ஆனாலும், அரிய இலக்கியமாம் இந்நற்றிணையை தொகுத்தளித்தவர் 'பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி' என்னும் புலவர் ஆவார்.நற்றிணையில் அமைந்துள்ள பாடல்கள் யாவும் சுவைமிகு அகப்பொருள் பாடல்களாக இடம்பெற்று மனதிற்கு நிறைவைத் தருகிறது. நற்றிணைப் பாடல்கள் அகப்பாடல்களாக இருப்பினும், அவற்றில் புறத்தின் கூறுகளாக மன்னர்கள், வள்ளல்கள், வீரர்கள் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளதால், காதலுடன் வீரமும் கலந்த கவிச்சுவை சிறப்பின் சிகரமாக விளங்குகிறது.

## நற்றிணையின் சிறப்புகள்

- ஐவகை நிலங்களிலே வாழ்ந்த தமிழ் மக்களின் சிறந்த ஒழுக்கங்கள் பலவற்றை இந்நூலிலே காணலாம்.
- தமிழர்களின் சிறந்த பண்பாடு, தமிழ்ப் பெண்களின் கற்பொழுக்கம், ஆண்களின் அசையாத அன்பு, தமிழர்களின் சிறந்த குடும்ப வாழ்க்கை, இவைகள் பற்றி இந்நூலில்காணலாம்.
- தமிழ்ப் புலவர்களின் சிறந்த இயற்கையான கற்பனைகளையும், கவியின்பத்தையும் இந்நூலிலே கண்டு களிக்கலாம்.
- குலத்தால் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கிற ஏற்ற இறக்கம் பார்க்காமலும், சமயசார்பற்ற தன்மையையும், தன்னை நம்பி வந்தவர்களைக் கைவிடாதிருத்தலும், எடுத்துக் கொண்ட செயலை முடித்தே காட்டுகின்ற வீரத்தின் விளைநிலத்துக்கு இலக்கணமாகவும் விளங்கினர் என்பதை நற்றிணை அகப்பாடல்களில் பல்வேறு இடங்களில் இத்தகைய பெருமைகளைப்பற்றி பதிவு செய்யப்பட்டிருக்கிறது.
- பிற்காலத்தில் சிறந்து விளங்கிய "தூது" என்ற சிற்றிலக்கியத்திற்கு வழிகாட்டியாகக் குருகு (பறவை) கிளி, நாரை ஆகியவற்றைத் தூதுவிடும் பாங்கினையும் நற்றிணைப் பாடல்கள் வாயிலாக நிரம்பக் காணலாம்.
- சங்ககாலத் தமிழர்கள் சாதி என்கிற கூட்டுக்குள் சிக்கி விடாமல், ஒருமைப்பாட்டு சமுதாயமாய் திகழ்ந்து மணவாழ்வில் கலந்து நிற்பதை பல காட்சிப் பாத்திரங்கள் நம் கண் முன்நின்று வியப்பு மேலோங்க விளக்குகின்றன.
- சங்கத் தமிழர்கள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கிற பாகுபாட்டை உடைத்தெறிந்திருக்கிறார்கள். சமுதாயத்தின் ஒற்றுமையைப் பேணி வளர்த்தெடுத்திருக்கிறார்கள்.
- 'நீரின்றமையாவுலகு', 'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர்', 'விருந்தோம்பல்' போன்ற வள்ளுவப் பேராசானின் கருத்துகள் பலவற்றிற்கு நற்றிணைப் பாடல்களே ஆதாரமாக இருக்கின்றன.

## அகக்கோட்பாடுகள்

இலக்கியத்தின் பொதுமை ஆக்கக் கூறுகளை விளக்குவதாக அமையும். இலக்கியத்தின் பொதுமைப் பண்புகள் புனைவமைக்கப்பட்டிருக்கும் நெறியினை விளக்குவதாகவே கோட்பாடு அமைகின்றது.அகக்கோட்பாடு என்பது இன்பம் எனும் அகப்பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, ஆகிய ஐந்துதிணைகளிலும் மக்களின் அன்புநிலை, வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள் ஆகியவை மனிதத்தோடு சேர்ந்து அறம்சார்ந்து விளங்குவதை அகக்கோட்பாடுகள் குறிக்கின்றன. ஆண்மக்களைக் காட்டிலும் பெண்மக்கள் அகக்கோட்பாடுகளில் சிறந்து விளங்குகின்றனர். நற்றிணை கூறும் மகளிரின் அகக்கோட்பாடுகள் பின்வருமாறு:

i). மரங்களையும் உடன்பிறந்தவர்களாக எண்ணுதல்
ii). விருந்தோம்பல் (உயர்பண்பு)
iii). அன்பு
iv). நட்பின் இலக்கணம்
v). இல்லற மாண்புகள்
vi). பொருளீட்டல்
vii). இரந்தோர்க்கு ஈதல்

## மரங்களையும் உடன்பிறந்தவர்களாக எண்ணுதல்

தாவரங்களுக்கு ஓர் அறிவாகிய 'தொடு உணர்வு' உண்டு என்பது தொல்காப்பியர் கூற்று. ஆனால் அதற்கு மேலேயும், பேச்சுகளை உணரும் தன்மையும், சூழலை உணரும் தன்மையும், செயல்களை உணரும் தன்மையும் அவைகளுக்கு உண்டு என்கிறது நற்றிணை. அதனாலேயே நற்றிணைப் பெண் ஒருத்தி தாவரத்தைத் தன்னுடைய மூத்த சகோதரி என்கிறாள். உடன்பிறந்தோரையே உதறித்தள்ளும் இன்றையக் காலச்சூழலில், தன் தாய் வளர்த்த புன்னை மரத்தைக்கூடத் தன் 'உடன்பிறந்தோராக' எண்ணும் உயரிய பண்பினை நற்றிணைக் காட்டுகிறது.

தன் காதலனோடு புன்னை மரத்தின்கீழ் நின்று பேசிக்கொண்டிருக்கும் பெண் ஒருத்தி, திடீரென இந்த மரத்தின் கீழ் நின்று பேச வேண்டாம், நாம் வேறு இடத்திற்குச் செல்வோம் என்கிறாள். காரணம் கேட்கும் காதலனிடம், 'நான் பிறப்பதற்கு முன்பாகவே

விதை ஊன்றி பாசத்தோடு வளர்க்கப்பட்டது இப்புன்னை மரம் என்றும், இது என்னை விடச் சிறந்ததென்றும், என் மூத்த சகோதரி என்றும் என் அம்மா கூறியிருக்கிறாள் அதனால் இதன் கீழ் நின்று உன்னோடு பேச எனக்கு நாணமாக இருக்கிறது' என்கிறாள்.
இதனை,

“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆ குமென்று
அன்னை கூறினள் புன்னையது சிற ப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே”

(நற்றிணை: 172)

என்ற பாடல் உணர்த்துகிறது.

**விருந்தோம்பல் (உயிர்பண்பு)**

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் உயர் பண்பு. விருந்தினர் என்பவர் இன்று வழங்கப்படுவதுபோல தெரிந்தவர்களோ உறவினர்களோ அல்ல; முன்பின் தெரியாதவர்கள்தான் விருந்தினர் என்பவர். முன்பின் தெரியாதவர்களையும் அன்போடு வரவேற்று, உபசரித்து, அவர்களுக்கு வேண்டும் உணவளித்து பசிபோக்குவதுதான் விருந்தோம்பல். அவ்வகையில், நடு இரவில் விருந்தினர் வந்தாலும்கூட அவர்களையும் அன்போடு வரவேற்று, இன்முகத்தோடு விருந்து உபசரிக்கும் இல்லத் தலைவியை நற்றிணை பின்வருமாறு சித்தரிக்கிறது

“அல்லில் ஆயினும் விருந்து வரின் உவ க்கும்
முல்லைசான்ற கற்பின் மெல்லியல் குறும கள்”

(நற்றிணை: 142)

மேலும் இதில், கற்பு என்பது இல்லத்திலிருந்து விருந்து உபசரிக்கும் நற்குணமே என்பதையும் அறியலாம்.
பண்பாட்டினைப் போற்றி வாழ்ந்த சங்ககால மக்கள் விருந்தோம்பலைத் தலையாயப் பண்பாகக் கொண்டனர். இல்லறத் தலைவியின் கடமையாகத் தொல்காப்பியர்,

“விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்,
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்”

(தொல்காப்பியம்)

என்பர். இல்லறத்தில் கணவனும் மனைவியும் இணைந்து விருந்தோம்ப வேண்டும். தம் உற்றார்உறவினரை மட்டுமல்லாமல் தம் இல்லம் நாடிவரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரிக்கவேண்டும். அதுமட்டுமன்றி அக்கால மகளிர் நள்ளிரவு ஆயினும் விருந்தினர்வரின் அவர்களை உபசரிக்கும் பண்புடையவர்கள் என்பதை,

“அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பினர்”

(நற்றிணை: 142)

என்ற பாடல் வரிகள் சுட்டுகின்றன.

**அன்பு**

குறிஞ்சி நிலத்தில் வாழ்கிற தலைவன் ஒருவன் தலைவியை வினை நிமித்தமாக பிரியக் கருதுவதாக தோழி நினைக்கிறாள் அதை தலைவியிடம் கூறுகிறாள் மறுமொழியாக தலைவி என் தலைவன் சொல் தவறாதவன், இனியவன் என் தோளைப் பிரியமாட்டான் என்றெல்லாம் கூறி நீர் இல்லாது எப்படி உலகம் அமைய இயலாதோ அது போல அவனின்றி அமைதல் இல்லை என்று “நறுநுதல் பசத்தல் அஞ்சிச் சிறுமை உறுபவோ செய்பு அறியலரே” என்று கூறுகிறாள். தனக்கு பசலை படரும்படி அவர் நோக வைக்க மாட்டார் என்று கூறும் தலைவியின் கூற்றில் தலைவனை விட்டுப் பிரிதல் என்பது நோய்க்கும் தன் துயருக்கும் காரணமாகும் என்பதாகக் கூறுகிறாள்.

“நின்ற சொல்லர்; நீடு தோறு இனியர்;
என்றும் என் தோள் பிரிபு அறியலரே;
தாமரைத் தண் தாது ஊதி,
மீமிசைச் சாந்தில் தொடுத்த தீம் தேன் போல,
புரைய மன்ற, புரையோர் கேண்மை;
நீர் இன்று அமையா உலகம் போலத்
தம் இன்று அமையா நம் நயந்தருளி
நறு நுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே!”

(நற்றிணை: 1)

இப்பாடல் திருமணத்திற்கு பின் இல்லறம் நடத்தும் கற்பொழுக்கக் கைக்கோளுக்கு உரியது.

**நட்பின் இலக்கணம்**

தலைவன் மீது தீராத ஊடல் கொண்டுள்ள தலைவியைத் தேற்றுதல் உடனடியாக நடக்காது என்பதைப் புரிந்துகொண்ட தோழியின் கூற்றாக அமைந்த பாடலில்மலையிலிருந்து வீழும் அருவி எப்படி இருந்தது என்பதைக் கூறவந்த தோழி, ”தலைவியே, நீ வீணாகத் தலைவன் மீது குற்றம் சுமத்தாதே. நம் சமூகத்தின் வழக்கம் என்ன தெரியுமா? நமக்கு ஒரு விஷயத்தில் ஐயம் ஏற்படின் அந்த ஐயத்தை நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் கேட்டுத் தெளிவு பெற்றுக்கொள் என்றும் நான் சொல்வது உனக்கு உண்மையெனத் தோன்றவில்லையெனில் நான்கு பேரிடம்

கேட்டு சந்தேகத்தைப் போக்கிக்கொள்'' என்கிறும் கூறுகிறாள். மேலும் அவள்,

"அம்மலை கிழவோன் நம் நயந்து என்றும்
வருந்தினன் என்பது ஓர் வாய்ச்சொல் தேறாய்;
நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவு அறிந்து அளவல் வேண்டும். மறுத்தரற்கு
அரிய வாழி தோழி!-பெரியோர்
நாடி நட்பின் அல்லது,
நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே"

(நற்றிணை: 32)

என்ற பாடல் மூலம் எடுத்துரைத்து ஒருவருடன் நட்பு கொள்ளுமுன் அவரைப் பற்றி நன்கு ஆராய்ந்து பார்த்த பின்பு நட்பு கொள்ள வேண்டும். அப்படி நட்பு கொண்டபின் ஆராயக் கூடாது என்னும் அகக்கோட்பாட்டை முன்னிறுத்துகிறாள் தோழி.

**இல்லற மாண்புகள்**

செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்த தலைவி திருமணம் புரிந்து வாழ்க்கை நடத்துகிறாள். தன் தலைவன் குடும்பம் ஏழ்மையாக இருந்தாலும் செல்வமிக்கத் தன் தந்தையிடம் சென்று பொருள் பெற்று வாழலாம் என்று எண்ணவில்லை. ஒரு பொழுது மட்டுமே உண்டு கணவனுடன் இன்பமாக வாழும் தன் மகளின் பொறுப்பையும், இல்லற மாண்பையும் கண்ட பெற்றோர் வியக்கின்றனர். இப்படிப்பட்ட தலைவியின் இல்லறச் சிறப்பை,

"கொண்ட கொழுநன்குடி வறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுண்கு அறல் போல
பொழுது மறுத்து உண்ணும் சிறு
மதுகையாளே"

(நற்றிணை: 110)

என்ற பாடல் உணர்த்துகிறது. இன்றைய சமூகத்தில் செல்வச்செழிப்பு மிக்கக் குடும்பத்தில் உள்ள ஒருவரைத் திருமணம் செய்துகொண்ட கணவன் மனைவியிரிடையே பிரிவு ஏற்படுகிறது. இந்தப் பிரிவுக்கு செல்வம் மிக்கதும், உடலாலும், உள்ளத்தாலும், புரிந்து செயல்படாததும், வளைந்து கொடுக்காத போக்கும், ஆணவமும்தான் காரணமமாகஅமைகிறது. ஆனால் ஒருவரை ஓரவர் புரிந்துகொண்டு சேர்ந்துவாழும் சூழலை நற்றிணை 110-ஆம் பாடல் விளக்கியிருப்பதை நம்மால் உணரமுடிகிறது.

**பொருளீட்டல்**

இம்மைக்குரிய புகழும், மறுமைக்குரிய இன்பமும், மறுமையிலும் இன்புறுச்செய்யும் கொடைமையும் ஆகிய மூன்றையும் ஒருங்கே பெறுவதற்குப் பொருள் தேவை. இதனை உணர்ந்த தலைவன் பொருளீட்டப் பிரிந்து செல்கின்றான், பிரிவாற்றாத தலைவி.

"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு
இன்பமென
வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை"

(நற்றிணை: 214)

என்று கூறுகின்றாள்.

**இரந்தோர்க்கு ஈதல்**

தம்மிடம் வந்து இரந்து நிற்பவர்க்கு அவர் வேண்டும் பொருளைத் தந்து அவருடைய விருப்பத்தினை நிறைவேற்றுதல் இல்லத்தாரின் கடமையாகும். இதை அறியாது தலைவன் விரைவில் வினைமுடித்துமீண்டு வரவில்லை. இதனை,

"....................................... தம்வயின்
இரந்தோ மாற்றல் ஆற்றா
இல்லின் வாழ்க்கை வல்லாதோரே"

(நற்றிணை: 84)

என்று பிரிவிடை ஆற்றாத தலைவி தோழியிடம் வருந்திக் கூறுகின்றாள். இதிலிருந்து பிரித்த தலைவன் விரைவில் மீண்டு வந்தால் அவனுடன் சேர்ந்து இல்லறக் கடமையாகிய அறம் செய்ய முடியும். அதனை அறியாத தலைவன் விரைவில் மீண்டும் வரவில்லையே என்று வருந்துவது தெரிகிறது.

**முடிவுரை**

அறம் என்பதற்கு அகராதிகள் பல்வேறு பொருள்களைக் குறிப்பிடினும், தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உடலாலும் மனத்தாலும் தீங்கு நேராதவண்ணம் வாழ்வை நகர்த்திச் செல்லும் வழிமுறையைக் கற்றுக் கொடுப்பவற்றை அறங்கள் எனலாம்.இந்த அறங்களைத் தனிமனிதனுக்கு, குடும்பத்திற்கு, சமூகத்திற்கு, அரசனுக்கு நாட்டிற்கு என்று வகைப்படுத்தினும் சமூகம் சமநிலையில் தத்தமது அன்றாடப் பணிகளை மேற்கொள்ளத் துணையாக அறங்களைக் கொள்ளுதல் மரபு. அவ்வகையில், நற்றிணையில் இடம்பெற்றுள்ள கருத்துகள் பலவற்றுள் ஒருசோறு பதமாகஇருப்பதுபோலமேற்கண்ட மகளிர் அகக்கோட்பாடுகள் நற்றிணையில்சான்றாக விளங்குகின்றன.

நற்றிணையில் அகவாழ்வில் வரும் அகச்சிந்தனையின் பரிமாணம், புறவாழ்விலும் வெளிப்படுவது என்பது இயல்பான ஒன்றுதான். சிறந்ததொரு அக இலக்கியமான நற்றிணையில் ஆண், பெண்

உறவுகளின் மேன்மைகளும், மென்மைகளும் பாத்திரப் படைப்புகளில் பற்றிப் படர்ந்து காதலாய் கசிந்துருகி ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கின்ற இடங்கள் நிறைய உள்ளன. தலைவன் தலைவியாக, காதலன் காதலியாக, கணவன் மனைவியாக அன்பின் வயப்பட்டு வாழ்வின் திரும்பிய பக்கமெல்லாம் நெறி பிறழாத நிறை காதலை மையப் படுத்துகிறது இந்நூல். நற்றிணையில் கூறப்பட்டுள்ள மகளிரின் அகக்கோட்பாடுகளான வாழ்வியல் நெறிகள் அனைத்தும் இன்றைய வாழ்வியலை மேம்படுத்திக் கொள்வதற்கான கருத்துக்கள் ஆகும். இவை நம்முடைய இன்றைய வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ள துணைசெய்கின்றது.

**துணை நூற்பட்டியல்**


1. புலியூர்க் கேசிகன் நற்றிணை பாகம்-I
   ஸ்ரீ செண்பகம் பதிப்பகம்
   வெளியீடு-2010
2. முனைவர் ஆ. மணி நற்றிணை நானூறு
   திருநெல்வேலித் தென்னிந்திய
   சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
   திருநெல்வேலி-6
   சென்னை-1
3. முனைவர் சோ. ந. கந்தசாமி நற்றிணை
   ஆராய்ச்சித் தெளிவுரை
   மாணிக்கவாசகர் பதிப்பகம்
   31, சிங்கர் தெரு, பாரிமுனை
   சென்னை-600108
4. ஒளவை துரைசாமி பிள்ளை நற்றிணை
   மூலமும் உரையும்
   கௌரா பதிப்பகம்/சாரதா பதிப்பகம்
   வெளியீடு-2003.